9

# கிறிஸ்துவின் பாடுகளில் பங்கேற்றிருங்கள் (1 பேதுரு 4:12-19)

*பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள மார்க்கக் குழு ஒன்று, நீங்கள் செய்தித் தாளில் படித்திருக்கக் கூடிய, ஆர்வத்திற்குரிய ஒரு பழக்கத்தைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் ஈஸ்டர் தினத்திற்கு அண்மையில், அவர்களில் சிலர் தங்கள் முதுகுகளில் சிலுவையைக் கட்டிக்கொண்டும், மற்றவர்கள் அவர்களுக்குப் பின்னாலும் ஊர்வலமாகச் செல்வார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைந்த உடன், சிலுவையைச் சுமந்து செல்லும் மனிதர்கள் தங்களை உண்மையிலேயே அந்தச் சிலுவைகளில் அறையச் செய்து சற்றுநேரம் உயர்த்தியிருக்கச் செய்வார்கள். இதைச் செய்கின்ற மக்கள் உண்மை உள்ளவர்கள் என்பது தெளிவு, ஆனால் "கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்காளிகள் ஆகுதல்" என்பது முற்றிலும் வேறுபட்ட ஒன்று என்பதில் நான் உறுதியாயிருக்கிறேன். அவரது பாடுகளில் கிறிஸ்தவர்கள் பங்கேற்கும்போது, 4:13ல் கிறிஸ்தவர்கள் அவற்றிற்குப் பங்காளிகள் ஆனார்கள் என்ற கருத்தில், அது அவர்கள் கர்த்தர் வாழ்ந்தது மற்றும் போதித்தது போன்று தாங்களும் வாழ்ந்து போதித்ததால் ஆனதாக உள்ளது.*

## பாடுகளைக் கண்டு திகைப்படைய வேண்டாம் (4:12-15)

பாடுகளைப் பற்றிப் பேதுரு, தமது வாசகர்களுக்குக் கொடுத்த வெளிப்படையான நான்கு குறிப்புகளில் (1:6, 7; 3:13-17; 4:12-19; 5:9, 10), 4:12-19ன் விவரிப்பு மிகவும் விரிவானதாக உள்ளது. 12ம் வசனத்தில் தொனியும் பாடக்கருத்தும் திடீரென்று மாறுவதைக் கணக்கிடச் சிலர், 4:11 வரையிலும் பேதுரு தமது நிருபத்தை எழுதிவிட்டுப் பின்பு அதை அப்படியே வைத்துவிட்டார் என்றும், துன்புறுத்தப்படுதல் வலிவான வகையில் தொடங்கிற்று என்ற செய்தி கிடைக்கப்பெற்ற பின்புதான் அவர் மீண்டும் அந்த நிருபத்தைத் தொடர்ந்து எழுதி முடித்தார் என்றும் கூறும் அளவிற்குச் சென்றுள்ளனர். அது உண்மையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், 11ம் வசனத்தில் உள்ள இறைபுகழ்ச்சியானது, 11 மற்றும் 12ம் வசனங்களுக்கு இடையில் அவரது சிந்தனையில் உள்ள முறிவின் கருத்தை ஆதரிக்கிறது.

முறைமைகளும் வழிகளும் மாறும், ஆனால் இயேசு போதித்து வாழ்ந்த படியே போதிக்கவும் வாழவும் மக்கள் எங்கெல்லாம் மும்முரமாக முயற்சி செய்கின்றனரோ, அங்கெல்லாம் துன்புறுத்தப்படுதல் தொடரும். 2 தீமோத் தேயு 3:12ல் பவுல் வெளிப்படையாகப் பின்வருமாறு கூறினார்:

“அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.” சமாதானப் பிரபுவானவர் “நான் பூமியிலே சாமாதனத்தை உண்டாக்கவந்தேன் என்று நினைக்கிறீர்களோ? சமாதானத்தையல்ல, பிரிவினையையே உண்டாக்கவந்தேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்று கூறினார் என்பது எவ்வளவு முரண்பாடான மெய்யுரையாக உள்ளது? (லூக்கா 12:51). இயேசுவைக் கிறிஸ்து என்று அறிக்கையிடுவதால் பாடுபட வேண்டியுள்ள எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் மதிப்புமிக்க ஆதாரவளமாகப் பயன்படக்கூடிய நடைமுறை அறிவுரைகள் சிலவற்றைப் பேதுரு தமது வாசகர்களுக்கு கொடுத்தார்.

**பாடுகள் எதிர்பார்க்கப்பட வேண்டியவைகளே**

கிறிஸ்தவர்கள் ஏன் வதைக்கப்படவும் சிறுமைப்படுத்தப்படவும் வேண்டும் என்பதற்கு உறுதியான காரணம் எதுவும் இருப்பதில்லை. முதல் நூற்றாண்டு உலகத்தின் ஆசியா மைனர் பகுதியில், ஆண்களும் பெண்களும் நல் விசுவாசத்தில் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருந்தனர். அவர் தேவனுடைய குமாரன் என்று அவர்கள் விசுவாசித்தனர்; அவர்கள் தங்கள் விசுவாசத்தில் தங்களை ஆதரித்த மற்றும் ஊக்குவித்த மக்களைக் கண்டறிந்தனர். அவர்கள் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாக நடத்த, சுயத்தை அழித்துப் பாழாக்கும் பாவங்களில் இருந்து விலகியிருக்க, தங்கள் குடும்பங்களை நன்கு நடத்த, மற்றும் கடினமாக உழைப்பதால் நேர்மையாகப் பொருளீட்ட நோக்கம் கொண்டிருந்தனர். அவர்கள் துன்புறுத்தப்படுதலை எதிர்பார்ப்பதற்குக் காரணம் எதையும் கொண்டிருக்கவில்லை. அது ஏன் நடக்கிறது என்று அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. பேதுரு உண்மையான விளக்கம் எதையும் அளிக்கவில்லை; அது தவிர்க்க முடியாத ஒரு உண்மை நிலை என்று மாத்திரம் அவர் உறுதிப்படுத்தினார் (4:12).

ரோமப் பேரரசின் தொடக்க நூற்றாண்டுகளில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டது ஏன்? இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கும் முயற்சியாக, கற்றறிந்த மனிதர்கள், கடந்த நூறு அல்லது அதற்குச் சற்றேறக் குறையலான ஆண்டுகளில், பழங்காலப் பதிவேடுகளை ஆராய்வு செய்து பல தொகுதியாக புத்தகங்களை எழுதியிருக்கின்றனர். அவர்கள் ஒரு பகுதி மாத்திரமே வெற்றி நிறைந்தவர்களாக உள்ளனர். கிறிஸ்தவர்கள் மனமாற்றங்களை ஆதாயப்படுத்த முயற்சி செய்ததால் அவர்களைச் சிலர் எதிர்த்தனர். ஓரிகென் என்ற பெயர்கொண்ட மூன்றாம் நூற்றாண்டு எழுத்தாளர் ஒருவர், கிறிஸ்தவர்களுக்குக் கசப்பான விரோதியாக இருந்த செல்ஸஸ் என்பவருக்குப் பதில் அளிக்க ஒரு புத்தகத்தை எழுதினார். ஓரிகெனின் புத்தகம் இன்றும் உள்ளது, ஆனால் செல்ஸஸ் எழுதியது என்ன என்பதை நாம், ஓரிகென் பதிவுசெய்துள்ள நீண்ட மேற்கோள்களில் இருந்து மட்டுமே அறிகிறோம். கிறிஸ்தவர்கள் “கம்பளி வேலை செய்பவர்கள், செருப்புத் தைப்பவர்கள், சலவைத் தொழிலாளர்கள், மற்றும் மிகவும் கல்வியறிவற்றவர்களும் நயப்பாங்கற்ற நாட்டுப்புறத்தவர்களுமாக இருந்தனர்” என்று செல்ஸஸ் விவரித்தார். அவர்கள், வாழ்வதற்கான வழி என்று தாங்கள் அறிந்திருந்ததை “தனிமையில் இருந்த சிறு பிள்ளைகளும் அவர்களுடன் இருந்த மதியற்ற பெண்களும்” நம்பி இணங்குபடி அவர்களை வஞ்சித்தனர் என்று அவர் கூறினார். மற்றவர்களும், கிறிஸ்தவர்கள் குடும்ப வாழ்விற்கு

இடையூறாக இருப்பதாகவும் ஒன்றுமறியாத தங்கள் பிள்ளைகளையும் பேதையர்களான தங்கள் மனைவியர்களையும் கிறிஸ்துவை அறிக்கையிடும்படி வசப்படுத்த முயற்சி செய்ததால், அவர்களை விமர்சிப்பதிலும் துன்புறுத்துவ திலும் செல்ஸஸுடன் இணைந்திருந்தார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

அவிசுவாசிகள் கிறிஸ்தவர்களை வெறுப்பதற்குப் பிற காரணங்களைக் கண்டறிந்து இருக்கலாம், ஆனால் அவர்கள் [கிறிஸ்தவர்கள்] நல்லவர்களாக இருந்தனர் என்பது ஒரு முக்கியமான காரணமாக இருந்தது என்பது நிச்சயம். பொய்யுரைத்தல், திருடுதல் மற்றும் வேறுவகையில் தங்கள் சக மனிதரைத் தவறாகப் பயன்படுத்துதல் என்பவற்றைச் செய்பவரின் பாவங்கள் ஒழுக்க நேர்மையுடனும் தூய்மையுடனும் உள்ளவர்களின் வாழ்வுடன் நேரெதிராக ஒப்பிட்டுப் பார்க்கையில் அதிகம் மன்னிக்கப்பட முடியாதவைகளாக உள்ளன. காலத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் உள்ள கிறிஸ்தவர்கள், தேவபக்தி இல்லா தவர்களின் கோபாக்கினையை உணர்ந்தனர் என்பதற்கான ஒரு முக்கியமான காரணத்தை யோவான் தொட்டார்: "பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப்போலிருக்கவேண்டாம்; அவன் எதினி மித்தம் அவனைக் கொலைசெய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே. என் சகோதரரே, உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்" (1 யோவான் 3:12, 13). கிறிஸ்தவர்கள் வாழ்விற்கான தங்கள் நிலைப்பாட்டை இயேசு வாழ்ந்த வாழ்வினுடையது போன்றதாக்கும் போது, தங்கள்மீது பற்றியெரியும் அக்கினிபோன்ற சோதனைகள் வரும்போது அதைப் புதுமை யானவையாக நினைக்கக் கூடாது.

### அவருடைய பாடுகளுக்குப் பங்காளிகளாகுதல் மகிழ்ச்சிக்குக் காரணமாகிறது

பேதுருவைப் பொறுத்த மட்டில், கிறிஸ்தவர்கள் துன்புறுதலுக்கான காரணம் அந்தத் துன்பத்தின் விளைவைப்போல் குறிப்பிடத் தக்கதாக இருக்கவில்லை. அவர்கள் நசுக்கப்பட்டு, சோதிக்கப்பட்டபோது, அவர்கள் கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்காளிகளாகும் சிலாக்கியம் அருளப்பட்டவர்களாக இருந்தனர் (4:13). அதுவே மகிழ்ச்சிக்குக் காரணமாக இருந்தது. இவ்வுலகத்தில் கிறிஸ்துவுடன் பாடுகளை அனுபவிக்கும் மகிழ்ச்சியானது, அவரது மகிமையின் வெளிப்படுதலுக்கு ஆயத்தமாக இருந்தது. அந்த மகிமை வந்தபின்பு, இப்போதைய சந்தோஷமானது எடுத்துரைக்க இயலாத சந்தோஷமாக மாற்றப்படும்.

கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்தப் பாடுகளினால், தேவனுடைய குமாரனின் ஜீவன் மற்றும் ஊழியம் ஆகியவற்றுடன் பிணைக்கப்படுகின்றனர் என்ற சிந்தனையானது தேவவசனங்களில் வேறு இடங்களிலும் காணப்படுகிறது. பவுல், "இப்பொழுது நான் உங்கள்நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" என்று எழுதினார் (கொலோசெயர் 1:24). ஒருவேளை பவுல், இயேசுவுக்குப் பாடுகளைக் கொண்டு வந்ததான, தேவனுக்குக் கீழ்ப்படிதல் உள்ள அதே வாழ்வு அவரது சீஷர்களுக்கும் பாடுகளைக் கொண்டுவரும் என்று கூறியிருக்கலாம்.

கிறிஸ்துவுக்குள் செய்யப்பட வேண்டிய ஊழியம் உள்ளது. தேவனுடைய மக்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து தேவபக்தியுடன் வாழும்போது, ஒருகருத்தில் அவர்கள் கிறிஸ்து செய்த ஊழியத்தை நிறைவேற்றுகின்றனர். அதுபோல, அதற்காக அவர்கள் துன்புறுத்தப்படுகிறபோது, அவர்கள் அவரது பாடுகளை நிறைவேற்றுகின்றனர். தேவனுடைய குமாரனின் ஊழியம் மற்றும் பாடுகளில் பங்கேற்றல் என்பது சந்தோஷத்திற்குக் காரணம் ஆகிறது.

**தேவனுடைய மகிமையின் ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்**

புதிய ஏற்பாடானது, மத்தேயு 5:1-12ல் உள்ளவற்றைத் தவிர மற்ற பாக்கியங்களையும் கொண்டுள்ளது. மலைப்பிரசங்கத்தில் இயேசு, "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்று கூறினார் (வசனம் 11). கர்த்தர் கூறியதைக் கேள்விப்பட்டதன் நினைவுகூருதலில் இவ்வார்த்தைகளைப் பேதுரு மேற்கோள் காண்பித்திருக்கலாம். எவ்வகையிலும், 4:14ல் "நிந்திக்கப்பட்டால்" என்றும் "பாக்கியவான்கள்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே வார்த்தைகள் மத்தேயு சுவிசேஷத்திலும் 5:11ல் காணப்படுகின்றன என்பது ஆர்வத்திற்குரியதாகும்.

கிறிஸ்தவர்கள் அநீதியாகத் துன்புறுத்தப்படும்போது, "தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்" என்று பேதுரு கூறினார் (4:14). இருப்பினும் கிரேக்க மொழியானது, மகிமை என்பதன் மீது மாபெரும் வலியுறுத்தத்தை அனுமதிக்கிறது. அப்போஸ்தலர் பின்வருவது போன்று சிலவற்றைக் கூறியிருக்கலாம்: "தேவனுடைய மகிமையுள்ள பிரசன்னத்தின் ஒளிவட்டமும் தேவனுடைய ஆவியானவரும் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்." பழைய ஏற்பாட்டில் "கர்த்தருடைய மகிமை" என்ற சொற்றொடர், தேவனுடைய பிரசன்னத்தின் இந்த பரிசுத்த ஒளிவட்டம் என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. எடுத்துக்காட்டாக, யாத்திராகமம் 24:15, 16ல் "மோசே மலையின்மேல் ஏறினபோது, ஒரு மேகம் மலையை மூடிற்று. *கர்த்தருடைய மகிமை* சீனாய்மலையின்மேல் தங்கியிருந்தது" என்று கூறப்படுகிறது. (என்னால் வலியுறுத்தப்படுகிறது.) பிந்திய யூதத்துவ எழுத்துகளில், தேவனுடைய மகிமையுள்ள பிரசன்னத்தைக் குறிப்பதற்கு *ஷேக்கினா* என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது. ஒருவேளை பேதுரு, இந்தக் கிறிஸ்தவர்கள் அவருடைய நாமத்தின் நிமித்தம் சிறுமைப்படுத்தப்பட்டபோது அல்லது அவமானப்படுத்தப்பட்டபோது, தேவனுடைய பிரசன்னத்தின் மகிமையுள்ள ஒளிவட்டம் அவர்களைச் சுற்றிச் சூழ்ந்திருந்தது என்று ஆவிக்குரிய கருத்தமைவில் கூறியிருக்கலாம்.

**மேன்மையானதற்காகப் பாடநுபவியுங்கள்,**
**கீழானவற்றிற்காக ஒருபோதும் பாடநுபவியாதீர்கள்**

பரிசுத்தமாக வாழ்வதற்கான அழைப்பு 1 பேதுரு நிருபத்தில் திரும்பத் திரும்ப வரும் ஒரு பல்லவியாக உள்ளது. கிறிஸ்துவின் பாடுகள் மற்றும் மறு வருகை ஆகியவற்றின் ஆய்வுக்கருத்துகள் என்ற வகையில் இது ஏறக்குறைய இந்தப் புத்தகத்தின் தொனிக்கு அடிப்படையாக உள்ளது. 1:14ல் இருந்து,

*அப்போஸ்தலர், பரிசுத்தமாயிருக்க வேண்டுகோள் விடுத்தார். 2:12ன் கருத்தானது 4:15ன் கருத்திற்கு ஒப்பானதாக உள்ளது. பரிசுத்த நடக்கைக்கு விசேஷித்த கட்டளையொன்று, 2:20ல் வேலைக்காரர்களுக்கும் 3:1, 2ல் மனைவியர்களுக்கும் உரைக்கப்பட்டது. இந்தச் சிந்தனை 3:8-17ல் மீண்டும் மேலாதிக்கம் பெறுகிறது.*

*"ஆதலால் உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, ... பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது" என்று 4:15ல் பேதுரு கூறினார். கிறிஸ்தவர், துன்மார்க்கம் செய்பவராயிருந்து பாடநுபவிக்கக்கூடாது என்பதற்கு அவர் அதிகம் பொதுப்படையான சொற்றொடர்களைக் கூடுதலாகக் கூறினார். இந்தச் சொற்றொடர்கள் யாவும் ஓரளவு நேர்நோக்குடையவைகளாகும், ஆனால் இந்தப் பட்டியலில் உள்ள நான்காவது விஷயமானது கணிசமான அளவுக்கு, அதிகக் கடினமானதாக உள்ளது.* NASB *வேதாகமத்தில் "இடர்ப்பாட்டில் தலையிட்டுக்கொள்பவர்" என்றுள்ளது. இதை "தலையிட்டுக்கொள்பவர்" என்று மொழிபெயர்த்ததால்* NIV *வேதாகமம், "மற்ற மனிதர்களின் விஷயங்களில் தலையிட்டுக்கொண்டவர்" என்ற* KJV *வேதாகமத்தினால் முன்வைக்கப்பட்ட பாரம்பரியமான கருத்தைப் பின்பற்றுகிறது. இந்த மொழிபெயர்ப்புக்குப் பின்னால் உள்ள கிரேக்க வார்த்தை, இவ்விடத்தில் காணப்படுவதற்கு முன்பு, புதிய ஏற்பாட்டிலோ அல்லது உலகப்பிரகாரமான எழுத்துக்களிலோ பயன்படுத்தப்படவில்லை. இவ்வார்த்தையைப் பேதுரு உருவாக்கினார் என்று சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். கருத்தாகத் தெரிவிக்கப்பட்ட அர்த்தங்களின் மத்தியில், "குறும்பு செய்பவர்"* (RSV) *திருட்டுப் பொருள்களை மறைக்கிற ஒரு "மாய வித்தைக்காரர்," ஒரு பேராசைகொண்ட மனிதர் மற்றும் ஒரு புரட்சியாளர் என்பவை உள்ளன. உண்மையில், கிரேக்க மொழியின் மிகச்சிறந்த மாணவர்களும்கூட இந்தச் சொற்றொடர் எதை அர்த்தப்படுத்துகிறது என்று நிச்சயமாகக் கூறுவதில்லை.*

## அவரது நாமத்தைத் தரித்துக்கொள்ள வெட்கப்படாதிருங்கள் *(4:16-18)*

*தேவனுடைய பிள்ளையாக இருப்பவர், துன்மார்க்கம் செய்வதால் பாடநுபவித்தல் என்பது வெட்கக்கேடானது, ஆனால் கிறிஸ்தவர் என்ற வகையில் பாடநுபவித்தல் என்பது தேவனை மகிமைப்படுத்துவதற்கான சந்தர்ப்பமாக உள்ளது என்று பேதுரு கூறினார் (4:16). புதிய ஏற்பாட்டில் "கிறிஸ்தவர்" என்ற வார்த்தை மூன்று முறைகள் மாத்திரமே வருகிறது. பேதுரு இதை ஒருமுறை பயன்படுத்தினார் மற்றும் லூக்கா இதை இருமுறை (நடபடிகள் 11:26; 26:28) பயன்படுத்தினார். கிறிஸ்தவர் என்ற வார்த்தை அவிசுவாசிகளால் முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்ட போது, அது ஏளனத்திற்கும் இகழ்ச்சிக்குமான ஒரு சொற்றொடராக இருந்திருக்க முற்றிலும் சாத்தியக்கூறு உள்ளது, ஆனால் மக்கள் தங்கள் விரோதிகளின் அடைமொழிகளை எடுத்துக்கொண்டு அதைத் தனிச்சிறப்புடன் அணிதல் என்பது அடிக்கடி நடைபெறுகிறது. ஒரு நபரைக் கீழாக்கும் நோக்கத்துடன் பயன்படுத்த நோக்கங்கொண்டுள்ள அதே சொற்றொடரை அவர் தமக்குத் தாமே சூட்டிக்கொள்ளும்போது, அதைக் கொண்டு அவரை இகழுதல் என்பது கடினமாக உள்ளது. இயேசுவே கிறிஸ்து*

என்று விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படியப் பிரியமாக இருப்பவர்களை விவரிப்பதற்கு, கிறிஸ்தவர் என்பதைத் தவிர வேறு எந்தச் சொல்லும் தகுதியாக இருப்பதில்லை.

தொடக்ககாலத்தில் மனம் மாறியவர்கள், கிறிஸ்தவர் என்ற பெயரை உற்சாகமாய் தழுவிக் கொண்டிருந்தனர், ஆனால் தாங்கள் பாடநுபவிக்கத் தேவன் ஏன் அனுமதித்தார் என்பதைப் புரிந்து கொள்வதில் சிரமம் கொண்டிருந்தனர். நீதியானது தனது மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு இந்த உலகத்தை விட்டே சென்று விட்டது போலத் தோன்றியிருக்க வேண்டும். சிலவேளைகளில் இது நமக்கும் அவ்வாறே தோன்றுகிறது. ஒன்றுமறியாதவர்கள் பாடநுபவிக்கின்றனர், மற்றும் அதிகாரம், செல்வம், செல் வாக்கு உடையவர்களால் நல்லவர்கள் நசுக்கப் படுகின்றனர். "உலகத்தில் நீதியே இல்லை" என்ற முறையிடுதல், யோபுவில் இருந்து சங்கீதங்கள் வரையிலும் எரேமியா வரையிலும் எதிரொலிக்கிறது. (காண்க யோபு 24:1; சங்கீதம் 10; எரேமியா 12:1, 2.) ஆசியா மைனர் பகுதியில் இருந்த கிறிஸ்தவர்கள், தங்களை ஒடுக்குகிறவர்களுக்கு எதிராகத் தேவன் தமது நியாயத்தீர்ப்பை இன்னும் நிறைவேற்றாமல் இருந்தது ஏன் என்று திகைத்திருந்தார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. தேவன் நியாயந்தீர்ப்பார் என்பதே பேதுருவின் பதிலாக இருந்தது. அது அவருக்கு ஏற்புடைய காலத்தில் அவரது வழிமுறையில் இருக்கும், ஆனால் அவர் நியாயந்தீர்ப்பார், மற்றும் இன்னமும் அவர் அவ்வாறு நியாயந்தீர்ப்பார் (4:17).

பேதுருவின் முதல் வாசகர்கள் பாடநுபவித்தார்கள் என்ற உண்மையினால், துன்மார்க்கருக்குத் தேவனின் நியாயத்தீர்ப்பு வருவதற்கான ஆதாரத்தைப் பேதுரு கண்டார் என்பது வினோதமாகக் காணப்படலாம். தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஏற்கனவே தொடங்கி இருந்தது; அது தேவனுடைய வீட்டிலே தொடங்கி இருந்தது. ஆபகூக் தீர்க்கதரிசியின் நாட்களில் போன்று, கர்த்தர் என்ற வகையில் தேவன் தமக்குச் சொந்தமாகக் கொண்டிருந்த மக்களைச் சிட்சிக்கவும் கடிந்துகொள்ளவும் அவர்களைக் காட்டிலும் அதிகம் துன்மார்க்கமான மக்களைப் பயன்படுத்தினார். தேவன் ஏற்றவேளையில் கல்தேயர்களை நியாயந்தீர்ப்பார் என்பதை ஆபகூக் மிகவும் தெளிவாக்கியது போலவே, பேதுரு தமது வாசகர்களை ஒடுக்குபவர்களைத் தேவன் நியாயந்தீர்ப்பார் என்று உறுதிப்படுத்தினார். பேதுருவுக்கும் அவரது வாசகர்களுக்கும், எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று என்று நமக்குத் திரும்பவும் நினைவூட்டப்படுகிறது (4:7). அப்படி இருந்தும்கூட, பொன்னானது அக்கினியால் பரீட்சிக்கப்படுவது போன்று, அவரது பலத்த புய மானது அவரது மக்களைச் சிட்சித்து, உருவாக்கி மற்றும் ஆயத்தப்படுத்தி யதற்கான ஆதாரங்களை அவர்கள் கண்டனர் (1:6, 7). அவரது நியாயத்தீர்ப்பு தொடங்கி இருந்தது. அது கிறிஸ்தவர்களிடத்தில் தொடங்கி இருந்தது என்றால், தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள் முடிவு என்னவாகும்? என்று பேதுரு சொல்திறனுடன் கேட்டார். அந்த ஒரு தைரிய மான எதிர்பார்ப்பானது அவர்களை ஆறுதல் படுத்தியது மற்றும் அவர்கள் தங்கள் போராட்டத்தைத் தொடரவும் தங்கள் உலகத்தை மாற்றவும் அவர்களுக்கு வல்லமை அளித்தது. முடிவு காலத்தில் வாழுதல் என்ற கருத்தறிவு கொண்டுள்ளவர்கள், வாழ்வின் ஒவ்வொரு தீர்மானத்தையும், மாறுபட்ட கருத்துநோக்கில் இருந்து ஏற்படுத்துகின்றனர்.

நான் சரியாகக் கூறுகிறேன் என்றால், கர்த்தருடைய சபைக்கு, கர்த்தருடைய

*மறுவருகை பற்றிய அதன் எதிர்பார்ப்பு - அல்லது எதிர்பார்ப்பில் குறைவு - பற்றிய ஆன்ம - ஆராய்வுத்தேடல் செய்வது அவசியமாக உள்ளது. உண்மையான கிறிஸ்தவர்கள் தற்கால உலகத்தில் எதிர்ப்பை முகமுகமாய் எதிர்கொள்கின்றனர் என்று வைத்துக்கொள்வோம், ஆனால் பேதுருவின் நிருபத்தை முதன்முதலாக வாசித்தவர்கள் அனுபவித்த சோதனைகளுடன் நமக்கு ஏற்படும் சோதனைகளை ஒப்பிட்டால், நமக்கு ஏற்படும் சோதனைகள் மிகவும் இலகுவானவைகளாக உள்ளன. ஒருவேளை இது, முதல் நூற்றாண்டு உலகத்தைக் காட்டிலும், நவீன உலகம் அதிக இரக்கமும் சகிப்புத் தன்மையும் உடையது என்பதால் இவ்வாறு இருக்கலாம். அது ஒரு சாத்தியக்கூறாக உள்ளது, ஆனால் நவீன காலத்து சபையானது தனது பணிப்பொறுப்பின் அவசரத்தன்மை பற்றிச் சிறிதளவே கூருணர்வு கொண்டுள்ளது என்பதால், இந்த உலகமானது நவீன காலத்து சபையை மிகக் கொஞ்சமாக எதிர்க்கிறது மற்றும் மிகக் கொஞ்சமாகத் துன்புறுத்துகிறது என்பதே மிகவும் ஏற்புடைய கருத்தாக உள்ளது.*

*நீதிமான்களுக்கு இரட்சிப்பின் சிரமம் அல்லது தேவபக்தியவற்றவர்கள் மற்றும் பாவிகள் ஆகியோரின் நியாயத்தீர்ப்பு பற்றிய கருத்தறிவு கொண்டிரா திருந்தால், "நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்?" என்று 4:18ல் பேதுரு கூறிய நீதிமொழிகள் 11:31ன் மேற்கோளானது நமக்குக் கொஞ்சமாகவே செய்திகூறுவதாக இருக்கும். சபையானது புதுப்பிக்கப்பட வேண்டும் என்றால், முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களைப் போன்றே நாமும் கர்த்தருடைய மறு வருகைக்காக எதிர் பார்ப்புடனும் ஏக்கத்துடனும் இருந்தால்தான் அது நடைபெறும். "எல்லா வற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று." "ஆமென். கர்த்தராகிய இயேசுவே வாரும்."*

## *உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவுக்கு உங்கள் ஆத்துமாக்களை ஒப்புக்கொடுக்க அஞ்சாதிருங்கள் (4:19)*

*அடுத்ததாகப் பேதுரு, தமது வாசகர்கள், அவர்கள் கிறிஸ்தவர்கள் ஆகியிருந்ததால் அவர்களின் வாழ்வின்மீது மேலாதிக்கம் செலுத்தியிருந்த பாடுகளைக் கையாள்வது எவ்வாறு என்பதற்குரிய அடிப்படைக் கொள்கைக்கு வந்தார். இது தனிச்சிறப்பான இரண்டு கட்டளைகளை உள்ளடக்கியது.*

### *உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்*

*அவர்கள் தங்கள் ஆத்துமாக்களை, உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று பேதுரு கூறினார் (4:19). சிலவற்றைச் சிலரிடத்தில் ஒப்புவித்தல் என்பது அதை அவரிடத்தில் அர்ப்பணித்து விடுதல் என்றாகிறது. இவ்வசனத்தில் "ஒப்புக்கொடுத்தல்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள அதே கிரேக்க வார்த்தையானது 2 தீமோத்தேயு 2:2ல் பவுலினால் பயன்படுத்தப்பட்டுள்ளது: "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி."*

*நாம் இளம் பிராயத்தினர் ஆகிறவேளையில், நம்மில் பெரும்பான்மை யானவர்கள் நம்மைப் பிறரிடத்தில் ஒப்புவிப்பதில் சில மோசமான*

அனுபவங்களைப் பெற்றிருக்கிறோம். நாம் ஒருசில வேளைகளில் காட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறோம். யாருக்கேனும் அல்லது எதற்கேனும் நம்மை ஒப்புக்கொடுத்தல் என்பது அதிகம் அதிகமாகக் கடினமாகிறது. வேறுயாரேனும் ஒருவரைச் சார்ந்திருத்தல் பற்றி நாம் மிகக் குறைவாகச் சிந்திக்கிறபோது நாம் மிக அதிகமாக, மிக மேன்மையாக சுயசார்பு உடையவர்களாக முடிகிறது. இவ்விடத்தில் ஒரு பிரச்சனை எழுகிறது என்பது உண்மையே: முடிவான ஆய்வில் நாம் சுய நிறைவுடையவர்களாக இருப்ப தில்லை. "மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், அதின் மேன்மையெல்லாம் வெளியின் பூவைப்போலவும் இருக்கிறது" (ஏசாயா 40:6). இவ்வசனத்தைப் பேதுரு 1:24ல் மேற்கோள் காண்பித்தார். அவர் தமது வாசகர்கள் தங்களின் உபத்திரவம் பற்றிக் கொண்டிருந்த எல்லாக் கேள்விகளுக்கும், யோபு தாம் கொண்டிருந்த கேள்விக்குப் பதில் அளித்ததைக் காட்டிலும் அதிகம் பதில் அளிக்க முடியாதவராக இருந்தார், ஆனால் நாம் ஒரே ஒருவரிடம் மாத்திரம் நம்மை ஒப்புவிக்க முடியும் என்று அவர் அறிந்திருந்தார். உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவுக்குக் கிறிஸ்தவர்கள் தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று பேதுரு வேண்டிக் கேட்டுக்கொண்டபோது, அவர் யோபுவின் முடிவை பிரதானமாய் அவர்களுக்குக் கொடுத்தார்: "தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்" (யோபு 42:2).

**நன்மைசெய்கிறவர்களாய் நிலைத்திருங்கள்**

4:19ன் கடைசிச் சொற்றொடரை, NASB வேதாகமம், NIV வேதாமத்தைக் காட்டிலும் சற்று வேறுபட்ட வகையில் மொழிபெயர்க்கிறது. NASB வேதாகமத்தில், "சரியானவற்றைச் செய்வதில் தங்கள் ஆத்துமாக்களை சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக் கடவர்கள்" என்றிருக்கையில் NIV வேதாகமத்தில், "தங்கள் உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுத்து நன்மை செய்யத் தொடருபவர்களாக இருக்கக் கடவர்கள்" என்றுள்ளது. ஒருவர், நன்மை செய்வதன் வழியாகத் தம்மைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கிறார் என்பதே இங்கு கருத்தாக உள்ளது. இரு செயல்கள் ஒரேவேளையில் நடப்பவையாக உள்ளன. NIV வேதாகமத்தில் இது இரண்டு தனிச்சிறப்பான விஷயங்கள் உள்ளன என்பது போன்று ஒலிக்கிறது: ஒன்று, உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவுக்கு ஒருவர் தம்மை ஒப்புக்கொடுத்தல்; அத்துடன் கூடுதலாக, ஒருவர் நன்மை செய்யத் தொடருதல். ஒருவர் தம்மைத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தல் என்பது காண இயலாத நுட்பக்கருத்தாக இருப்பதில்லை. ஒருவர் நன்மை செய்வதன் மூலமாகத் தம்மைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கிறார். நன்மை செய்வதன் மூலமாக ஒருவர் தம்மைத் தேவ னுக்கு ஒப்புக்கொடுக்கக் கற்றுக்கொள்கிறார் என்பதே கூடுதலானதாக இருக்கிறது. மிக உயர்வான நுட்பக் கருத்துக்களினால் நான் ஒருக்காலும் மனம் ஈர்க்கப்பட்ட தில்லை. நண்பர்களின் கூட்டுறவில் நமது வேதாகமத்தைத் திறந்து வைத்துக்கொண்டு வட்டமாக அமர்ந்திருக்கையில் நாம் தேவனை எவ்வளவு ஊக்கமாக அன்புகூர முடிகிறது என்பதும், இருப்பினும் நாம் உலகத்தில் வீசியெறியப்படுகையில் எவ்வளவு அசுத்த ஆவி உடையவர்களாக இருக்க முடிகிறது என்பதும் மிகவும் திகைப்பானதாக உள்ளது.

யூதத்துவ எழுத்துப் பணிகளில் தல்மூத் என்று அழைக்கப்படும் மாபெரும்

*பணியானது நம்மில் பலருக்கு அது மிகவும் அற்பமானதாகக் காணப்பட்டாலும் அது மாபெரும் உட்கண்ணோக்கம் கொண்டிருக்கிறது. ஒரு சீஷர் ஒருமுறை, "நான், கர்த்தரை அன்புகூருதலை எவ்வாறு கற்றுக்கொள்ள முடியும்?" என்ற கேள்வியுடன் ரபீயை அணுகினார். ஞானமுள்ள ரபீ, "நீங்கள் விரும்பிய வண்ணம் கர்த்தரை அன்புகூர்ந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள் என்று கற்பனை செய்துகொள்ளுங்கள். அதைச் செய்யுங்கள், அப்போது நீங்கள் அவரை அன்புகூருவீர்கள்" என்று பதில் அளித்தார். பேதுரு தமது வாசகர்களுக்குக் கூறிய புத்திமதியானது மிகவும் வேறுபட்டதாகக் காணப்படுவதில்லை. "உங்களைத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்" என்று அவர் கூறினார். நாம் நம்மைத் தேவனுக்கு எவ்வாறு ஒப்புக்கொடுக்க முடியும்? உறுதிப்பாடு உள்ளவர்களாகச் செயல்படுவதன் மூலம் நாம் நம்மை ஒப்புக்கொடுக்கிறோம். நமது செயல்பாடுகள் நமது எண்ணப்போக்குகளைத் தீர்மானிக்கின்றன என்பது நமது எண்ணப்போக்குகள் நமது செயல்பாடுகளைத் தீர்மானிக்கின்றன என்பது போன்றே குறைந்த பட்சமாவது உண்மையாக உள்ளது.*

## முடிவுரை

*"அக்கினிபோலப் பற்றி எரிகிற சோதனைகள்" என்பவை, 1 பேதுரு நிருபத்தில் 4:12-19ம் வசனப் பகுதியில் நமக்கு முன் வைக்கப்பட்டிருப்பது போன்று இந்த நிருபத்தில் வேறு எவ்விடத்திலும் காணப்படாததாக உள்ளன. இந்த நிருபம் முழுவதிலும் பேதுரு, மற்ற இடங்களில் செய்திருப்பது போலவே, இந்த கிறிஸ்தவர்கள் பாடநுபவித்தலுக்கு இரு வழிகளில் பதில் செயல் செய்ய வேண்டும் என்று கூறினார்: (1) பரிசுத்தமாக வாழ்வதினால் தங்கள் ஒப்புக்கொடுத்தலைப் புதுப்பித்தல், மற்றும் (2) கர்த்தருடைய மறுவருகையை எதிர்பார்த்திருத்தல். இவ்வசனங்களின் கருத்துப்பொருளானது இந்த நிருபத்தின் எஞ்சிய பகுதியில் இருந்து வேறுபடுதல் என்பதல்ல, ஆனால் இவ்விடத்தில் அந்தச் செய்தி மிகவும் அவசரமானதாக உள்ளது என்பதே இங்கு கருத்தாகும். பேதுருவின் வாசகர்களுக்கு நேர்ந்திருந்த சோதனைகளின் கடுமையானது, அவர்களுக்கு அவர், நியாயத்தீர்ப்பை, தொடக்கத்தை அவர்கள் காணக்கூடியதாக இருந்த நியாயத்தீர்ப்பை நினைவூட்டக் காரணமாயிற்று. ஒரு கேள்வியைக் கேட்டல் மூலம் பேதுரு, குறைவானதில் இருந்து அதிகமானதற்கு வாதிட்டார். கிறிஸ்தவர்கள் மீதான புடமிடும் நியாயத்தீர்ப்பே கடினமானதாக இருக்கும் என்றால், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள் முடிவு என்னவாக இருக்கும்?*

*இவ்வசனப் பகுதியானது இன்றைய நாட்களில் கிறிஸ்துவின் சபைக்கு மாபெரும் செய்தியொன்றைக் கொண்டுள்ளது. அந்தச் செய்தி பின்வருமாறு: நாம் கடைசிக் காலங்களில் வாழ்கிறோம். கர்த்தர் சீக்கிரம் வருகிறார். அவரது மகிமை வெளிப்படும்போது நாம் அதிகம் சந்தோஷம் அடையும்படிக்கு, இப்போது நாம் அவருடன் பாடநுபவிக்க அனுமதிக்கப்பட்டால், நாம் பாக்கியமான மக்களாக இருப்போம்.*